செ. வெ. எண். 649 நாள். 30.10.2012

## செய்தி வெளியீடு

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று, 30.10.2012, மழையினால் சேதமடைந்த நெடுஞ்சாலைத்துறையின் சாலைகளை விரைந்து செப்பனிடுவது தொடர்பாக நெடுஞ்சாலைத்துறையின் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி மற்றும் உயரதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழகம் முழுவதும் தற்போது பெய்துவரும் கனமழையினால் நெடுஞ்சாலைகளில் 3 இடங்களில் ஏற்பட்டுள்ள உடைப்புகள், 3877 கீ.மி. நீளச்சாலைகளில் ஏற்பட்டுள்ள சிறுசிறு சேதங்கள், 80 இடங்களில் ஏற்பட்டுள்ள நிலச்சரிவுகள், 2 பெரிய பாலங்கள் மற்றும் 229 சிறு பாலங்களில் ஏற்பட்டுள்ள சேதங்களை உடனடியாக போக்குவரத்திற்கு ஏற்றவகையில் செப்பனிடுவதற்கு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மழை வெள்ளத்தினால் சாலைகளில் தேங்கும் தண்ணீரை உடனுக்குடன் சாலைப் பணியாளர்கள் மூலமாக அப்புறப்படுத்துவதற்கும், சாலைகளில் ஏற்படும் அரிப்புகளை தடுப்பதற்கு சீரியமுறையில் கண்காணித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நெடுஞ்சாலைத்துறையின் பொறியாளர்களுக்கு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

வெளியீடு:-

இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9